DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 173 /2022**

Deposition of Witness: DW2.

| | | | |
|---|---|---|---|
| Name | பால்பாண்டியன் | Father Name – | பாலுச்சாமி |
| Age | 46 | Village – | பண்ணைப்புரம் |
| | | Taluk – | உத்தமபாளையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.08.2026.

**பிரதிவாதிகள் தரப்பு முதல் விசாரணை.**

நான் தற்போது பண்ணைப்புரம் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து உத்தமபாளையம் வட்டாட்சியருக்கு அனுப்பப்பட்ட சாட்சி அழைப்பாணையின் பேரில் உத்தமபாளையம் வட்டாட்சியர் எனக்கு அளித்த அனுமதி கடிதத்தின் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். உத்தமபாளையம் வட்டாட்சியர் எனக்கு அளித்த அனுமதி கடிதத்தின் நகல் **சா.சா.ஆ.1** ஆகும், சர்வே எண்.909 க்கான அ–பதிவேடு உண்மை நகல் **சா.சா.ஆ.2** ஆகும், சர்வே எண்.909 க்கான அடங்கல் பதிவேடு உண்மை நகல் **சா.சா.ஆ.3** ஆகும், சர்வே எண்.909 க்கான புல வரைபடம் **சா.சா.ஆ.4** ஆகும்.

சர்வே எண்.909/4C1, 2 மற்றும் 4 யார் பெயரில் உள்ளது என்றால் சர்வே எண்.909/4C1 ஆனது லட்சுமணன் மனைவி முருகேஸ்வரி, லட்சுமணன், ஜெயலட்சுமி மற்றும் முத்துப்பாண்டி பெயரில் உள்ளது, சர்வே எண்.909/4C2 என்பது பாதையாக உள்ளது. சர்வே எண்.909/4C4 என்பது கிருஷ்ண மூர்த்தி மகன் ஜெயச்சந்திரன் பெயரில் உள்ளது. சர்வே எண்.909/4C1 ன் கிழக்கு, வடக்கு, தெற்கு மற்றும் மேற்கு அளவுகள் என்ன என்றால் வடபுறம் கிழமேல் 16.8 மீட்டர், தென்புறம் கிழமேல் 17 மீட்டர், கிழக்கு பக்கம் தென்வடல் 7.6 மீட்டர், மேற்கு பக்கம் தென்வடல் 8.6 மீட்டர். சர்வே எண்.909/4C2 ன் கிழக்கு, வடக்கு, தெற்கு மற்றும் மேற்கு அளவுகள் என்ன என்றால் வடபுறம் கிழமேல் 17 மீட்டர், தென்புறம் கிழமேல் 17 மீட்டர், கிழக்கு பக்கம் தென்வடல் 3.6 மீட்டர்,

மேற்கு பக்கம் தென்வடல் 3.6 மீட்டர். சர்வே எண்.909/4C4 ன் கிழக்கு, வடக்கு, தெற்கு மற்றும் மேற்கு அளவுகள் என்ன என்றால் வடபுறம் கிழமேல் 17 மீட்டர், தென்புறம் கிழமேல் 16 மீட்டர், கிழக்கு பக்கம் தென்வடல் 19.8 மீட்டர், மேற்கு பக்கம் தென்வடல் 19.2 மீட்டர்.

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. சர்வே எண்.909 ஆனது ரயத்துவாரி புஞ்சையாக இருந்து தற்போது நத்தம் நிலமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். நத்தம் நிலவரி திட்டத்தின்போது ஆவணங்களின் அடிப்படையில் உட்பிரிவு செய்தோமா அல்லது அனுபவத்தின் அடிப்படையில் உட்பிரிவு செய்தோமா என்றால் வீடு கட்டியவர்களுக்கு கட்டிடம் கட்டப்பட்ட அடிப்படையில் உட்பிரிவு செய்தோம், காலியிடத்திற்கு அப்போதிருந்த பட்டாதரர்களுக்கே பட்டா வழங்கினோம். சர்வே எண்.909/4C2 என்பது பாதையாக உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.909/4C2 என்பதை ஆவணத்தின் அடிப்படையில் உட்பிரிவு செய்தோமா அல்லது அனுபவத்தின் அடிப்படையில் உட்பிரிவு செய்தோமா என்றால் ஆவணத்தின் அடிப்படையில் உட்பிரிவு செய்தோம். பொதுவாக நத்தம் நிலமாக வகைப்படுத்தும்போது ஆவணத்தின் அடிப்படையில் வகைப்படுத்துவது தான் சரியானது என்றால் சரிதான்.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.08.27 15:35:13 +0530

District Munsif,
Bodinayakanur.